தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 24, ஸ்ரீமுக - திருவள்ளுவர் ஆண்டு 2025

1994 ஏப்ரல் 7, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை **10.00** மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை"

பகைவர்களால் கெடுக்க முடியாததாயும், ஒரு வேளை கேடு சூழ்ந்தாலும் அதன் காரணமாக தன் வளம் குன்றாததாயும் உள்ள நாடே, நாடுகள் எல்லாவற்றிலும் தலைசிறந்த நாடாகக் கருதப்படும்.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

1. கவன ஈர்ப்பு

(அ) அரவக்குறிச்சி தொகுதி குடகனாற்றில் தண்ணீர் திறந்து விடாததால் பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

2. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஸ் வழிமறிப்பு, கொள்ளை பற்றி இன்றே எடுத்துக் கொள்ளவேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நாளைக்கு எடுக்கிறேன். (குறுக்கீடு) உங்கள் பிரச்சினை நாளை எடுக்கப்படும். இன்றைக்கு நேரடியாக நேற்றைய பதிலுரைக்காக "வினாக்கள்-விடைகள்" நேரம் கூட ஒதுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) திருமதி கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார். (குறுக்கீடு) திரு. குமாரதாஸ் உட்காருங்கள். நாளைக்கு எடுக்கிறேன். இன்றைக்கு எடுக்க வழியில்லை. (குறுக்கீடு)

1. கவனஈர்ப்பு-- தொடர்ச்சி

(அ) அரவக்குறிச்சி தொகுதி குடகனாற்றில் தண்ணீர் திறந்து விடாததால் பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கே. மரியம் உல் ஆசியா

*** திருமதி கே. மரியம் உல் ஆசியா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " அரவக்குறிச்சி தொகுதியில் குடகனாற்றில் தண்ணீர் திறந்து விடாததால் குடகனாற்றுப் பாசனப் பகுதிகளில் பயிர்களும், தென்னை மரங்களும் நீரின்றி வாடுவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ்: ** (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறை தவறி நடந்ததால் குமாரதாஸ் அவையை விட்டு வெளியேறவும். (குறுக்கீடு) குமாரதாஸை அவையை விட்டு அப்புறப்படுத்தவும். (குறுக்கீடு) முறை தவறி நடப்பதை அனுமதிக்க முடியாது. மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்.

(டாக்டர் தே. குமாரதாஸ் அவையை விட்டு வெளியேறினார்)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.